# Tnpsc Model Question Paper 26 – General Studies in Tamil

Click Here to Download More Tnpsc Model Questions

1. இலையில் காணப்படும் பச்சையம் ----------க்குத் தேவைப்படுகின்றது.
**(அ) ஒளிச்சேர்க்கை** (ஆ) சார்பசைவு (இ) நீராவிப்போக்கு (ஈ) திசை சாரா தூண்டல் அசைவு

2. கூற்று (A): ஹீமோகுளோபினில் இரும்புச் சத்து உள்ளது.
காரணம் (R): இரும்புச்சத்து குறைபாடு இரத்தசோகை நோயை ஏற்படுத்துகிறது.
**(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி; (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம் ஆகும்**
(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி; ஆனால் (R) என்பது (A)விற்கு சரியான விளக்கம் அல்ல
(இ) (A) சரி; ஆனால் (R) தவறு
(ஈ) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் தவறு

3. உடலில் அதிகப்படியான கொழுப்பு சேர்வதால் உடலின் எடை அசாதாரணமாக அதிகரிக்கும். இதனை ---------- என்பார்கள்
(அ) நீரிழிவு (ஆ) பாலியூரியா **(இ) உடல் பருமன்** (ஈ) பாலிடிப்சியா

4. வளிமண்டல கார்பன் டை ஆக்சைடு தாவரங்களுக்குள் சென்று நிலைப்படுத்தப்படும் நிகழ்வு ------ என அழைக்கப்படுகின்றது.
**(அ) ஒளிச்சேர்க்கை** (ஆ) நீராவியாதல் (இ) சுவாசித்தல் (ஈ) சிதைத்தல்

5. கீழ்கண்டவற்றுள் சரியான ஒப்பிடுதலை தேர்ந்தெடுக்கவும்:
அ. அமில ஊடகத்தின் பினாப்தலீன் – நிறமற்றது
ஆ. கார ஊடகத்தின் பினாப்பதலீன் – மஞ்சள்
இ. அமில ஊடகத்தின் மெத்தில் ஆரஞ்சு – இளஞ்சிவப்பு/சிவப்பு
ஈ. கார ஊடகத்தின் மெத்தில் ஆரஞ்சு – நிறமற்றது
**(அ) அ மற்றும் இ சரியானவை** (ஆ) அ மற்றும் ஆ சரியானவை
(இ) ஆ மற்றும் இ சரியானவை (ஈ) இ மற்றும் ஈ சரியானவை

6. டீசல் எஞ்சினில் உள்ள எரிபொருளின் பற்றவைப்பு தாமதக் கால அளவை அளப்பதற்கு உதவும் அளவு
**(அ) சீட்டேன் எண்** (ஆ) ஆக்டேன் எண் (இ) கலோரி மதிப்பு (ஈ) தன் ஆற்றல்

7. மத்தியில் உள்ள தனிமத்தின் அணு நிறையானது ஏறக்குறைய மற்ற இரு தனிமங்களின் அணுநிறையின் சராசரிக்கு சமமாகும்
(அ) நவீன ஆவர்த்தன விதி (ஆ) நியூலாந்தின் எண்ம விதி
**(இ) டாபர்னீரின் மும்மை விதி** (ஈ) மெண்டலீவின் ஆவர்த்தன விதி

8. இயற்பியல் அளவுகளை அதன் அலகுகளுடன் சரியாகப் பொருத்துக:
அ. அழுத்தம் 1 $Nm^{-1}$
ஆ. பரப்பு 2. $Nm^{-2}$
இ. பரப்பு இழுவிசை 3. N
ஈ. விசை 4. $m^2$

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 3 | 2 | 4 |
| ஆ. | 3 | 1 | 4 | 2 |
| **இ.** | **2** | **4** | **1** | **3** |
| ஈ. | 4 | 2 | 3 | 1 |

9. விண்மீன்களின் குழுக்கள் ------ என்று அழைக்கப்படுகின்றன.

(அ) சூரிய மண்டலம் **(ஆ) நட்சத்திரக் கூட்டங்கள்** (இ) கோள்கள் (ஈ) இவை அனைத்தும்

10. உயரமான இடங்களில், பொருளின் கொதிநிலை
**(அ) குறையும்** (ஆ) அதிகரிக்கும்
(இ) குறைந்து, பின் அதிகரிக்கும் (ஈ) அதிகரித்து, பின் குறையும்

11. இமயமலை பற்றிக் கூறப்படும் பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?
அ. பெரிய இமயமலை இமாத்ரி என்று அழைக்கப்படும்.
ஆ. சிறிய இமயமலை மற்றும் சிவாலிக் குன்றுகளை ஒப்பிடும் போது இப்பகுதி அதிக மழையைப் பெறுகின்றது.
இ. புகழ் பெற்ற கோடை வாழிடங்கள் இமயமலைத் தொடரில் அமைந்துள்ளன.
(அ) அ மட்டும் **(ஆ) அ மற்றும் இ மட்டும்** (இ) அ மற்றும் ஆ மட்டும் (ஈ) ஆ மற்றும் இ மட்டும்

12. உலகின் மிக நீளமான அணை எது?
(அ) நாகார்ஜீன சாகர் அணை **(ஆ) ஹிராகுட் அணை**
(இ) பக்ரா–நங்கல் அணை (ஈ) தாமோதர் பள்ளத்தாக்கு அணை

13. ஓதக்காடுகள் -------- என்றும் அழைக்கப்படுகின்றன.
(அ) பருவகாலக்க காடுகள் (ஆ) அல்பைன் காடுகள்
**(இ) அலையாத்திக் காடுகள்** (ஈ) மழைக்காடுகள்

14. கிழக்கு மத்திய இரயில்வேயின் தலைமையிடம் எங்கு அமைந்துள்ளது?
(அ) ஜபல்பூர் **(ஆ) ஹாசிப்பூர்** (இ) ஜெய்ப்பூர் (ஈ) பிலாஸ்பூர்

15. உலக் மக்கள்தொகை தினம் ஜீலை 11ஆம் நாள் என்பது எந்த ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது?
(அ) 1986 (ஆ) 1987 (இ) 1988 **(இ) 1989**

16. பின்வருவனவற்றுள் எத்துறை பேரிடர் மேலாண்மை ஆணையத்துடன் செயல்படுகின்ற மாவட்ட அமைப்பு அல்ல?
**(அ) அஞ்சல் துறை** (ஆ) வருவாய்த்துறை (இ) குடிமைப்பணி நிர்வாகம் (ஈ) உள்ளூர் காவல்துறை

17. இந்திய தேர்தல் ஆணையம் அமைக்க வழி வகை செய்யும் அரசியல் அமைப்புப் பிரிவு எது?
(அ) அரசியல் அமைப்புப் பிரிவு 280 (ஆ) அரசியல் அமைப்புப் பிரிவு 302
(இ) அரசியல் அமைப்புப் பிரிவு 316 **(ஈ) அரசியல் அமைப்புப் பிரிவு 324**

18. குடியுரிமைப் பற்றி தொடர்புள்ள சட்டப்பிரிவுகளாவன
**(அ) சட்டப்பிரிவு 5–11** (ஆ) சட்டப்பிரிவு 14–18 (இ) சட்டப்பிரிவு 19–22 (ஈ) சட்டப்பிரிவு 25–28

19. சரியான விடையைத் தேர்வு செய்க:
தொடக்கக்கல்வி கற்றலை அடிப்படை உரிமையாகச் சேர்க்கப்பட்டுள்ள சட்டப்பிரிவு எது?
(அ) சட்டப்பிரிவு 51 (ஆ) சட்டப்பிரிவு 21 (இ) சட்டப்பிரிவு 29 **(ஈ) சட்டப்பிரிவு 21**

20. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:
"போக்சோ" சட்டம் என்பது ---------- ஆகும்
(அ) குழந்தைகள் மீதான பொருளாதாரச் சுரண்டல்
(ஆ) குழந்தைகள் மீதான பாலியல் சுரண்டல்
(இ) குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல்
**(ஈ) பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம்**

21. தமிழகத்திலிருந்து நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை
**(அ) மாநிலங்களவை 18 உறுப்பினர்கள் மற்றும் மக்களவை 39 உறுப்பினர்கள்**
(ஆ) மாநிலங்களவை 28 உறுப்பினர்கள் மற்றும் மக்களவை 39 உறுப்பினர்கள்

(இ) மாநிலங்களவை 81 உறுப்பினர்கள் மற்றும் மக்களவை 39 உறுப்பினர்கள்
(ஈ) மாநிலங்களவை 80 உறுப்பினர்கள் மற்றும் மக்களவை 39 உறுப்பினர்கள்

22. இந்திய மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் அதிகாரம் --------- இடம் உள்ளது
(அ) குடியரசுத் தலைவர் (ஆ) பிரதம அமைச்சர் (இ) மாநில அரசாங்கம் **(ஈ) நாடாளுமன்றம்**

23. மத்திய அரசு இந்து வாரிசுரிமை சட்டம் எந்த ஆண்டு திருத்தங்களை மேற்கொண்டது?
(அ) 2002 (ஆ) 2003 (இ) 2004 **(ஈ) 2005**

24. அழுத்தக் குழுக்கள் என்னும் சொல்லினை உருவாக்கிய நாடு
**(அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்** (ஆ) இந்தியா (இ) இங்கிலாந்து (ஈ) கனடா

25. லோக்ஆயுக்தா அமைப்பு மகாராஷ்டிரா மாநிலத்தில் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
(அ) 1970 **(ஆ) 1971** (இ) 1972 (ஈ) 1973

26. "ரிவோல்ட்" என்னும் ஆங்கிலப் பத்திரிக்கையை ஈ.வே.ரா. பெரியார் தொடங்கிய ஆண்டு எது?
(அ) 1925 **(ஆ) 1928** (இ) 1933 (ஈ) 1934

27. ஆங்கிலேயர் அச்சுறுத்தல் காரணமாக பாரதி ------ பகுதிக்கு இடம் பெயர்ந்தார்.
(அ) மாஹே **(ஆ) பாண்டிச்சேரி** (இ) பம்பாய் (ஈ) காசி

28. இந்திய தேசிய இராணுவத்தின் மீது விசாரணை நடைபெற்ற இடம் ----------ஆகும்
(அ) ஆக்ரா கோட்டை **(ஆ) செங்கோட்டை** (இ) வில்லியம் கோட்டை (ஈ) புனித ஜார்ஜ் கோட்டை

29. "அமர் சோனார் பங்களா" என்ற வங்காள தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?
(அ) சையது அபு முகம்மது (ஆ) இரஜினி கந்தா சென் **(இ) இரவீந்திரநாத் தாகூர்** (ஈ) முகுந்தா தாஷ்

30. காமராசரின் அரசியல் குரு யார்?
(அ) இராஜாஜி **(ஆ) சத்தியமூர்த்தி** (இ) நேரு (ஈ) காந்தி

31. மகாத்மா காந்தியின் அரசியல் குரு யார்?
(அ) M.G.ராணடே (ஆ) W.C.பானர்ஜி
(அ) பாலகங்காதர திலகர் **(ஈ) கோபால கிருஷ்ண கோகலே**

32. 1933-ஆம் ஆண்டு ஜனவரி 8-ம் நாள் எந்த நாளாக அனுசரிக்கப்பட்டது?
**(அ) கோவில் நுழைவு நாள்** (ஆ) மீட்பு நாள் (டெலிவரன்ஸ்டே)
(இ) நேரடி நடவடிக்கை நாள் (ஈ) சுதந்திரப் பெருநாள்

33. சிவசுப்பிரமணியனார் 1799 செப்டம்பர் 13ஆம் நாள் தூக்கிலிடப்பட்ட இடம்
(அ) கயத்தாறு **(ஆ) நாகலாபுரம்** (இ) விருப்பாட்சி (ஈ) பாஞ்சாலங்குறிச்சி

34. இந்திய தேசிய காங்கிரசால் பூரண சுதந்திர நாளாகக் கொண்டாடிய நாள்
**(அ) ஜனவரி 26, 1930** (ஆ) ஜனவரி 29, 1929
(இ) ஆகஸ்ட் 16, 1930 (ஈ) ஆகஸ்ட் 18, 1930

35. ஓர் எண்ணின் மதிப்பை 25% குறைத்தால் 120 கிடைக்கிறது எனில் அந்த எண்ணைக் காண்க:
(அ) 150 (ஆ) 140 **(இ) 160** (ஈ) 180

36. ஒரு தேர்வில் Aஎன்பவர் Bயை விட 25% மதிப்பெண்கள் அதிகம் பெற்றுள்ளார். B என்பவர் Cயை விட 10% குறைவாக பெற்றுள்ளார். C என்பவர் Dயை விட 25% மதிப்பெண்கள் அதிகம் பெற்றுள்ளார். D என்பவர் மொத்த மதிப்பெண்கள் 500க்கு 320 பெற்றுள்ளார் எனில் A என்பவர் பெற்ற மதிப்பெண்கள் எவ்வளவு?

(அ) 405 **(ஆ) 450** (இ) 360 (ஈ) 400

37. ஒரு பொருளின் மீது வழங்கப்படும் இரு தொடர் தள்ளுபடிகள் முறையே 25% மற்றும் 20% எனில், இதற்கு நிகரான ஒரே சமானத் தள்ளுபடி சதவீதத்தினைக் காண்க:
**(அ) 40%** (ஆ) 45% (இ) 5% (ஈ) 22.5%

38. 154, 198 மற்றும் 286 ஆகிய எண்களுக்கு மீ.பொ.கா. மற்றும் மீ.பொ.ம. காண்க:
**(அ) 22, 18018** (ஆ) 154, 18018 (இ) 18018, 22 (ஈ) 191, 18018

39. 8 $p^2qr$, 12 $p^2r^2$, 24 pqr என்ற எண்களின் மீ.பொ.ம
**(அ) 24 $p^2qr^2$** (ஆ) 8 $p^2qr^2$ (இ) 12 pr (ஈ) 24 pqr

40. ஒரு பள்ளியில் 45 நிமிடங்களைக் கொண்ட 7 பாட வேளைகள் உள்ளன. அப்பள்ளியில் பாட வேளைக் 9 ஆக மாறும் போது ஒவ்வொரு பாட வேளையின் கால அளவு
(அ) 25 (ஆ) 20 **(இ) 35** (ஈ) 30

41. ஒரு குடும்பத்தின் வரவுக்கும் செலவுக்கும் இடையே உள்ள விகிதம் 7 : 6 மற்றும் வரவு ரூ.21, 000 எனில் சேமிப்பு
(அ) ரூ.6, 000 (ஆ) ரூ.5, 000 **(இ) ரூ.3, 000** (ஈ) ரூ.4, 000

42. A : B = 4 : 6, B : C = 18 : 5 எனில் A : B : C ன் விகிதம்
(அ) 16 : 22 : 30 (ஆ) 12 : 20 : 5 (இ) 14 : 20 : 15 **(ஈ) 12 : 18 : 5**

43. ஒரு தொகையானது ஆண்டுக்கு 13 1/2% தனிவட்டி வீதத்தில் 4 வருடங்களில் ரூ.2, 502.50ஐத் தருகிறது எனில் அந்த தொகையைக் காண்க:
(அ) 1526 (ஆ) 1256 (இ) 2156 **(ஈ) 1625**

44. கடனாக வழங்கப்பட்ட அசல் ரூ.36, 000க்கு 2 ஆண்டுகள் 3 மாத காலத்திற்கு பின் தனிவட்டி மூலம் பெறப்பட்ட மொத்த தொகை ரூ.42, 480 எனில் வட்டி வீதம் யாது?
(அ) 5% (ஆ) 6% (இ) 7% **(ஈ) 8%**

45. எந்த வங்கி கடன் வழங்குவதில் கடைசி புகலிடம் என்று அழைக்கப்படுகிறது?
(அ) வணிக வங்கி (ஆ) இந்தியன் வங்கி
**(இ) ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா** (ஈ) ஸ்டேட் பேங்க ஆப் இந்தியா

46. ஒரு தொகையில் கூட்டுவட்டி 16 2/3% க்கு 3 ஆண்டுகளுக்கு ரூ.1, 270 வட்டியாக கிடைக்கிறது எனில் அதே தொகைக்கு தனிவட்டி வீதத்தில் 3 ஆண்டு முடிவில் கிடைக்கும் வட்டித் தொகை எவ்வளவு?
**(அ) ரூ.1, 080** (ஆ) ரூ.1, 000 (இ) ரூ.1, 090 (ஈ) ரூ.1, 070

47. ஒரு வகையான பாக்டீரியா முதலாவது ஒரு மணி நேரத்தில் 5% வளர்ச்சியும், இரண்டாவது மணி நேரத்தில் 8 வளர்ச்சி குன்றியும், மூன்றாவது மணி நேரத்தில் 10% வளர்ச்சியும் அடைகிறது. தொடக்கத்தில் அதன் எண்ணிக்கை 10, 000 ஆக இருந்தது எனில் மூன்று மணி நேரத்திற்குப் பிறகு அதன் எண்ணிக்கையைக் காண்க:
(அ) 9266 (ஆ) 9626 **(இ) 10626** (ஈ) 10266

48. ஓர் உள்ளீடற்ற அரைக்கோள ஓட்டின் உள் மற்றும் வெளிப்புற ஆரங்கள் முறையே 3 மீ மற்றும் 5 மீ ஆகும். ஓட்டின் வளைபரப்பு மற்றும் மொத்த் புறப்பரப்பு காண்க:
**(அ) 213.71 மீ$^2$, 264 மீ$^2$** (ஆ) 214.70 மீ$^2$, 260 மீ$^2$
(இ) 210.71 மீ$^2$, 265 மீ$^2$ (ஈ) 210.71 மீ$^2$, 264 மீ$^2$

49. சமமான விட்டம் மற்றும் உயரம் உடைய ஓர் உருளை, ஒரு கூம்பு மற்றும் ஒரு கோளத்தின் கன அளவுகளின் விகிதம்
(அ) 1 : 2 : 3 (ஆ) 2 : 1 : 3 **(இ) 3 : 1 : 2** (ஈ) 1 : 3 : 2

50. A மற்றும் B ஆகியோர் இணைந்து ஒரு வேலையை 30 நாட்களில் முடிப்பர். இருவரும் சேர்ந்து 20 நாட்கள் வேலை செய்த பிறகு B சென்று விடுகிறார். மீதமுள்ள வேலையை A 20 நாட்களில் முடிப்பர் எனில், முழு வேலையை A எத்தனை நாட்களில் முடிப்பார்?

**(அ) 60 நாட்கள்** (ஆ) 54 நாட்கள் (இ) 50 நாட்கள் (ஈ) 40 நாட்கள்

51. ஒருவர் சென்னையிலிருந்து டெல்லிக்குச் செல்ல இரயிலில் புறப்படுகிறார். அவர் தனது பயணத்தைப் புதன் கிழமை 22.30 மணிக்குத் தொடங்குகிறார். எந்தவிதத் தாமதமின்றி இரயில் செல்வதாகக் கொண்டால் மொத்தப் பயண நேரம் 32 மணி நேரம் ஆகும். அவர் எப்பொழுது டெல்லியைச் சென்றடைவார்?

**(அ) வெள்ளிக்கிழமை–6:30** a.m (ஆ) வெள்ளிக்கிழமை–6:30 p.m.

(இ) புதன்கிழமை–1:30 p.m. (ஆ) வியாழக்கிழமை–11:00 a.m.

52. முதல் இருபது இயல் எண்களிலிருந்து ஒரு முழு எண் சமவாய்ப்பு முறையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அந்த எண் பகா எண்ணாக இருப்பதற்கான நிகழ்தகவினைக் காண்க:

(அ) 1/6 (ஆ) 1/2 **(இ) 2/5** (ஈ) 3/5

53. 5, 9, x, 17 மற்றும் 21ன் சராசரியானது 13 எனில், xன் மதிப்பு காண்

(அ) 9 **(ஆ) 13** (இ) 17 (ஈ) 21

54. 5 எண்களின் சராசரி 27. இதில் ஒரு எண்ணை நீக்கும் போது சராசரி 2 குறைகிறது. ஏனில் விடுபட்ட எண் எது?

**(அ) 35** (ஆ) 27 (இ) 25 (ஈ) 40

55. கீழ்க்கண்ட எண் வரிசையில், எண் 5க்கு அடுத்து வரக்கூடியதும், எண் 3 தொடர்ந்து வராததுமாகிய எண் 8ன் எண்ணிக்கையைக் காண்:

5 8 3 7 5 8 6 3 8 5 4 5 8 4

7 6 5 5 8 3 5 8 7 5 8 2 8 5

(அ) 1 (ஆ) 2 (இ) 3 **(ஈ) 4**

56. அடுத்து வரும் எண் யாது?

3, 10, 29, 66, 127, ----

(அ) 164 (ஆ) 187 **(இ) 218** (ஈ) 216

57. பின்வரும் தொடர்வரிசையில் அடுத்து எண்:

198, 194, 185, 169, ?

(அ) 92 (ஆ) 112 (இ) 136 **(ஈ) 144**

58. ஒரு வாகனத்தின் மதிப்பு ஒவ்வோர் ஆண்டும் 15% குறைகிறது. வாகனத்தின் தற்போதைய மதிப்பு ரூ.45, 000 எனில், 3 ஆண்டுகளுக்குப் பிறகு வாகனத்தின் மதிப்பு என்ன?

(அ) ரூ.32ஈ513 (ஆ) ரூ.37, 635 **(இ) ரூ.27, 636** (ஈ) ரூ.38, 250

59. இரு மிகை முழுக்களின் பொது வகுத்தி 1 எனில் அவ்விரு எண்களும் எவ்வாறு அழைக்கப்படும்?

**(அ) அவ்விரு எண்களும் சார்பகா எண்கள்**

(ஆ) ஒரு எண்ணாவது பகா எண்ணாக இருக்க வேண்டும்

(இ) இரு எண்களும் இரட்டை எண்கள்

(ஈ) ஒரு எண்ணின் மடங்கு மற்றொரு எண்

60. 2021ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட "ஆர்காம்–ரீட்" என்ற சாதனம் கீழ்வரும் எந்த வகையான குறைபாடுள்ள மனிதர்களுக்கு பயன்படுகிறது?

**(அ) பார்வை** (ஆ) கேட்டல் (இ) உண்ணுதல் (ஈ) இயக்கம்

61. BRICs என்ற அமைப்பில் எத்தனை நாடுகள் உறுப்பு நாடுகளாக இருக்கின்றன?

**(அ) 5** (ஆ) 4 (இ) 3 (ஈ) 2

62. பின்வருவனவற்றுள் அன்னை தெரசா நினைவுத் திருமண உதவித் திட்டம் எதனை அடிப்படையாகக் கொண்டது?

(அ) ஏழை விதவைகள் (ஆ) சிறுபான்மையோர்

(இ) ஒற்றை தாய்மார்கள் **(ஈ) அனாதைப் பெண்களின் திருமணம்**

63. 'Playing it my way' என்ற புத்தகத்தை எழுதிய விளையாட்டு வீரர் யார்?

(அ) கபில்தேவ் (ஆ) யுவராஜ் சிங் **(இ) சச்சின் டெண்டுல்கர்** (ஈ) சானியா நேவால்

64. பின்வருபவற்றுள் எது தவறாக இணைக்கப்பட்டுள்ளன?

| ரயில் மண்டலம் | தலைமையகம் |
|---|---|
| அ. மத்திய வடக்கு | 1. அலாகபாத் |
| ஆ. மேற்கு | 2. மங்களூர் |
| இ. மத்திய | 3. ஜான்சி |
| ஈ. மத்திய கிழக்கு | 4. ஹாஜிபூர் |

(அ) அ மற்றும் ஆ **(ஆ) ஆ மற்றும் இ** (இ) அ மற்றும் ஈ (ஈ) இ மற்றும் ஈ

65. தேசிய மனித உரிமை ஆணையம் அமைக்கப்பட்ட ஆண்டு

(அ) 1948 டிசம்பர், 9 **(ஆ) 1948 டிசம்பர், 10** (இ) 1949 டிசம்பர், 9 (ஈ) 1949 டிசம்பர், 10

66. கே.காமராஜருக்கு பின் மதராஸ் மாநிலத்தின் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றவர் யார்?

(அ) சி.என்.அண்ணாதுரை **(ஆ) எம்.பக்தவத்சலம்**

(இ) மு.கருணாநிதி (ஈ) பி.எஸ்.குமாரசாமி ராஜா

67. ECR (கிழக்கு கடற்கரைச் சாலை) என்ற பெயரை "முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதி சாலை" என்று அழைக்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்த நாள்

(அ) பிப்ரவரி 02, 2022 (ஆ) மார்ச் 02, 2022 (இ) ஏப்ரல் 02, 2022 **(ஈ) மே 02, 2022**

68. "சமயச்சார்பின்மை" என்னும் சொல் ---------- மொழியில் இருந்து வந்தது.

(அ) கிரேக்கம் **(ஆ) இலத்தீன்** (இ) உருது (ஈ) ஆங்கிலம்

69. இந்தியாவில் ---------- ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வளர்க்க பெரிதும் உதவுகின்றன

**(அ) நடனம் மற்றும் இசை** (ஆ) இலக்கியம் மற்றும் இலக்கணம்

(இ) உணவு மற்றும் பழக்கவழக்கங்கள் (ஈ) கலை மற்றும் கட்டிடக்கலை

70. பல்லவர்கள் காலத்தில் அயல்நாட்டு வணிகர்கள் ------ என்று அறியப்பட்டனர்.

(அ) பட்டணசாமி **(ஆ) நானாதேசி** (இ) விதேசி (ஈ) தேசி

71. இந்திய தொல்லியல் துறையின் தலைமையகம் --------- உள்ளது.

**(அ) புது தில்லி** (ஆ) மும்பை (இ) சென்னை (ஈ) கொல்கத்தா

72. கீழ்க்கண்டவற்றுள் சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்:

(அ) ஹோல்கர்–புனே **(ஆ) பான்ஸ்லே–நாக்பூர்**

(இ) சிந்தியா–பரோடா (ஈ) பேஷ்வா–இந்தூர்

73. கீழ்க்கண்டவற்றுள் எந்த இணை தவறாகப் பொருந்தியுள்ளது:

**(அ) ஜாகிருதின் பாபர்–உலகைக் கைப்பற்றியவர்** (ஆ) ஷாஜகான்–உலகத்தின் அரசர்

(இ) ஷாஜி பான்ஸ்லே–சிவாஜியின் தந்தை (ஈ) அக்பரின் பாதுகாவலர்–பைராம் கான்

74. ----- முகலாயக் கட்டிடக் கலையின் சிறப்புமிக்க வடிவமாகும்.

(அ) கோல் கும்பாஸ் (ஆ) ஷாலிமர் தோட்டங்கள்
(இ) ஹீமாயூனின் கல்லறை **(ஈ) தாஜ்மஹால்**

75. "பெண் ஏன் அடிமையானாள்" என்ற நூலின் ஆசிரியர் யார்?
(அ) சிங்காரவேலர் (ஆ) முத்துலட்சுமி அம்மையார்
**(இ) பெரியார்** (ஈ) நீலாம்பிகை அம்மையார்

76. 1709-ல் தரங்கமபாடியில் ------- ஒரு முழுமையான அச்சகத்தை நிறுவினார்.
(அ) கால்டுவெல் (ஆ) F.W.எல்லிஸ் **(இ) சீகன்பால்கு** (ஈ) மீனாட்சி சுந்தரம்

77. தவறான ஒன்றை தெரிவு செய்க:
இரட்டை மலை சீனவாசன்.
1. 1893ல் ஆதி திராவிட மகாஜன சபை எனும் அமைப்பை உருவாக்கினார்.
2. இலண்டனில் நடைபெற்ற முதல் மற்றும் இரண்டாம் வட்ட மேசை மாநாடுகளில் கலந்து கொண்டார்.
3. அவ்வப்போது "சித்திர புத்திரன்" எனும் புனைப்பெயரில் கட்டுரைகளும் எழுதினார்.
4. 1932ல் செய்து கொள்ளப்பட்ட பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களுள் இவரும் ஒருவர்.
(அ) 1, 2 மற்றும் 3 (ஆ) 2 மற்றும் 4 **(இ) 3 மட்டும்** (ஈ) 4 மட்டும்

78. வேலு நாச்சியாரின் தந்தையின் பெயர் ---------- ஆகும்
(அ) முத்து குமார ரகுநாத சேதுபதி **(ஆ) செல்லமுத்து விஜய ரகுநாத சேதுபதி**
(இ) பெரிய உடையார் சேதுபதி (ஈ) சுந்தரேஸ்வர ரகுநாத சேதுபதி

79. "சிவகங்கையின் சிங்கம்" என அழைக்கப்படுபவர்---------
**(அ) பெரிய மருது** (ஆ) சின்ன மருது (இ) வேலு நாச்சியார் (ஈ) கட்டபொம்மன்

80. கீழ்காணும் கூற்றுகளில் கீழடியைப் பற்றிய சரியான கூற்றுகள் எவை?
1. செங்கற் கட்டுமானங்கள்.
2. தமிழ்-பிராமி எழுத்துகள் கொண்ட மட்கல ஓடுகள்.
3. கண்ணுக்கு மை தீட்டும் செப்புக்கம்பி.
4. பதிற்றுப்பத்தில் கீழடியைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.
(அ) 1, 2 மற்றும் 4 சரி (ஆ) 1, 2, 3 மற்றும் 4 அனைத்தும் சரி
**(இ) 1, 2 மற்றும் 3 சரி** (ஈ) 2 மற்றும் 4 சரி

81. சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்து முறை யாது?
(அ) கரோஷ்தி (ஆ) தேவநாகிரி **(இ) தமிழ்-பிராமி** (ஈ) கிரந்தம்

82. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்
- இக்குறள் வழிப் பெறப்படும் கருத்து யாது?
**(அ) சாதி ஒழிப்பு** (ஆ) மத ஒழிப்பு (இ) வர்க்க ஒழிப்பு (ஈ) வருண ஒழிப்பு

83. மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி
- என்று வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகின்றார்?
(அ) முதுமையில் காத்தல் (ஆ) நற்சொல் கூறல்
(இ) பொருள் கொடுத்து உதவுதல் **(ஈ) புகழும் படி வாழ்தல்**

84. அருளை விரும்பி நடப்பவர், பிறர் பொருளை விரும்ப நேரிட்டால் அவர் என்ன ஆவார் என வள்ளுவர் வினவுகிறார்?
(அ) நன்கு வாழ்வார் (ஆ) செழிப்புடன் வாழ்வார் **(இ) கெட்டொழிவார்** (ஈ) சுற்றமுடன் வாழ்வார்

85. தானமும் தவமும் செய்பவர்களைவிட உயர்ந்தவர்கள் யார் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்?

(அ) புறங்கூறாதவர் **(ஆ) உண்மை பேசுபவர்**
(இ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் (ஈ) இனிதாகப் பேசுபவர்

86. எப்படிப்பட்ட பொருள் ஒருவருக்கு இன்பத்தைத் தரும் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?
(அ) கொடையால வந்த பொருள் (ஆ) உரிமையால் வந்த பொருள்
**(இ) தீதின்றி வந்த பொருள்** (ஈ) போரால் வந்த பொருள்

87. நிலையற்றவைகளை நிலையானவை என்று கருதுகிறவர்களை வள்ளுவர் எப்படிப் பார்க்கிறார்?
(அ) பெருமையாக **(ஆ) இழிவாக** (இ) நம்பிக்கையாக (ஈ) வியப்பாக

88. சரியாகப் பொருந்தியுள்ளதைக் காண்க:
அ. முதல் வாகனத் தொழிற்சாலை 1. செராம்பூர்
ஆ. தேசியச் செய்தித்தாள் மற்றும் காகித ஆலை 2. கொல்கத்தா
இ. மத்திய பட்டு வாரியம் 3. நேபா நகர்
ஈ. முதல் காகிதத் தொழிற்சாலை 4. பெங்களுரு

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **2** | **3** | **4** | **1** |
| ஆ. | 4 | 3 | 2 | 1 |
| இ. | 1 | 2 | 3 | 4 |
| ஈ. | 4 | 1 | 2 | 3 |

89. பசுமைப் புரட்சியின் பலவீனங்கள் என்பதைப் பற்றிய பின்வரும் வாக்கியங்களில் எவை சரியானவை?
1. விதைகள் மற்றும் உரங்களுக்குப் பேரளவு மூலதனம் தேவைப்படுகிறது.
2. முதன்மைப் பயிர்களான கோதுமை மற்றும் நெல் உற்பத்தி பன்மடங்காகப் பெருகியது.
3. ஆதிக உரங்களின் பயன்பாடு நிலத்தின் செழுமைத் தன்மையைப் பாதித்தது.
(அ) 1 மற்றும் 2 மட்டும் **(ஆ) 1 மற்றும் 3 மட்டும்**
(இ) 1 மட்டும் (ஈ) 2 மற்றும் 3 மட்டும்

90. 1940இல் பம்பாய் திட்டத்தை வழங்கியவர்கள்
**(அ) 8 எட்டு முன்னணி அரசியல் அரசியல்வாதிகள்** (ஆ) எட்டு முன்னணி பொருளியல் அறிஞர்கள்
(இ) எட்டு முன்னணி தத்துவவாதிகள் (ஈ) எட்டு முன்னணி தொழில் அதிபர்கள்

91. தனிநபர் வருமானம் கணக்கிடப்படுவது
**(அ) தேசிய வருமானத்திலிருந்து மக்கள் தொகையை வகுத்தல்**
(ஆ) தேசிய வருமானத்திலிருந்து மக்கள் தொகையைக் கழித்தல்
(இ) தேசிய வருமானத்திலிருந்து மக்கள் தொகையை கூட்டுதல்
(ஈ) தேசிய வருமானத்திலிருந்து மக்கள் தொகையை பெருக்குதல்

92. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கம்
(அ) வறுமை ஒழிப்பு **(ஆ) விரைவான தொழில் வளர்ச்சி** (இ) வேலைவாய்ப்பு (ஈ) சமூக நீதி

93. கீழ்க்காண்பவற்றுள் எது/எவை "சமூக நீதி"யை வரையறுக்கும் பொழுது சேர்த்துக் கொள்ளப்படுகிறது.
1. சம உரிமை.
2. சம வாய்ப்பு.
3. சமமாக நடத்துதல்.
4. செல்வத்தினை அனைவருக்கும் சமமாக பகிர்தல்
(அ) 1 மட்டும் (ஆ) 1 மற்றும் 2 மட்டும்
**(இ) 1, 2 மற்றும் 3 மட்டும்** (ஈ) 1, 2 மற்றும் 4 மட்டும்

94. தமிழக அரசு முதல் மனித வளர்ச்சி அறிக்கை வெளியிட்ட ஆண்டு
(அ) 2000 **(ஆ) 2003** (இ) 2006 (ஈ) 2004

winmeen.com

95. இதில் சரியானவை எவை?
1. NHRC – தேசிய மனித உரிமைகள் ஆணையம்.
2. SHRC – சட்டப்படியான மனித உரிமைகள் ஆணையம்.
3. NCW – தேசியப் பெண்கள் மன்றம்.
4. RTI – தகவல் அறியும் உரிமைச்சட்டம்
(அ) 1 மற்றும் 2 சரியானவை **(ஆ) 1 மற்றும் 4 சரியானவை**
(இ) 2 மற்றும் 3 சரியானவை (ஈ) 2 மற்றும் 4 சரியானவை

96. இந்திய தேர்தல் ஆணையம் அமைக்க வழிவகை செய்யும் அரசியலமைப்பு பிரிவு எது?
(அ) பிரிவு 280 (ஆ) பிரிவு 315 **(இ) பிரிவு 324** (ஈ) பிரிவு 365

97. இந்தியாவில் தோல் பொருட்களை அதிகளவில் தயாரித்து ஏற்றுமதி செய்யும் மாவட்டம் எது?
(அ) சேலம் **(ஆ) வேலூர்** (இ) திண்டுக்கல் (ஈ) மதுரை

98. தமிழ்நாடு சுகாதாரச் சீரமைப்பு திட்டத்திற்கு நிதி உதவி எதன் மூலம் கிடைக்கின்றது?
**(அ) உலக வங்கி** (ஆ) உலக சுகாதார நிறுவனம் (இ) யுனெஸ்கோ (ஈ) தேசிய சுகாதார மிஷன்

99. தமிழ்நாட்டில் கல்வியறிவு விகிதம்
(அ) 79.9% **(ஆ) 80.9%** (இ) 81.9% (ஈ) 82.9%

100. பெருந்தொற்று நோயினால் முடக்கப்பட்ட காரணத்தால் உருவான கற்றல் குறைபாட்டை சரி செய்வதற்கு உருவாக்கப்பட்ட திட்டமே ---------- ஆகும்.
(அ) மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப வகுப்பறை திட்டம் (ஆ) கணினி ஆய்வகத் திட்டம்
**(இ) இல்லம் தேடிக் கல்வி திட்டம்** (ஈ) இல்லம் தேடி மருத்துவம் திட்டம்

winmeen.com